**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 1, இதழ் 1, 2020**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம் : http://restpublisher.com/book-series/ctll/**

# சிவவாக்கியரின் சிந்தனைப் புரட்சி

**முனைவர் ஆ. இரா. பாரதராஜா**

தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை -600 089

## 1. முன்னுரை

தமிழுக்கும் தமிழ் மருத்துவத்திற்கும், சோதிடத்திற்கும், புரட்சிகரச் சிந்தனைகளுக்கும், அறிவியல் நுட்பத்திற்கும், இறைஞானத்திற்கும் சித்தர் இலக்கியங்கள் எண்ணற்ற உண்மைகளை நுண்மையாக வாரி வழங்கியுள்ளன. சித்தர்கள் பதினெண்மர் எனக்கூறப் படினினும் எண்ணிக்கை அதிகம் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வாழ்வியல் நெறிகளை எளிமையாகவும், சூட்சமமாகவும் ஒவ்வொரு சித்தரும் வழங்கியுள்ளனர். அகத்தியர், போகர், கோரக்கர், திருமூலர், பட்டினத்தார், சட்டைமுனி, குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், சிவவாக்கியர், கடுவெளிச் சித்தர், பத்திரகிரியார், அழுகணீசித்தர், காசுபுண்டர், அகப்பேய்ச்சித்தர், தடங்கண்சித்தர் எனப் பலர் இருந்துள்ளனர். பெரும்பான்மையர் இறைப்பெருமை கூறினும், யாருக்கும் அஞ்சாது, மூட நம்பிக்கைகளைத் தகர்க்கும் புரட்சிகரமான கருத்தாக்கங்களையும் படைத்துள்ளனர். அவர்களுள் சிவவாக்கியர் சிந்தனைகள் புரட்சிகரமானதாகத் திகழ்கின்றன. அவை பற்றிய ஆய்வாகவே இக்கட்டுரை அமைகிறது.

## 2. சித்தர் – விளக்கம்

சித்தர் என்பதற்கு நிறைமொழிமாந்தர் என்னும் சொல்லாட்சி தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் இடம் பெற்றுள்ளது. “சித்தர் – என்பதற்குச் சித்தி பெற்றவர்கள் என்றும், சித்து என்ற சொல்லிற்கு – அறிவு, அரூபம், யாகம், அறிவுப் பொருள், மாயவித்தை, சித்தி, வெற்றி, கலம்பக உறுப்பு, ஒருவகை வளக்கூத்து” – எனக் கழகத்தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. சித்தரை, அறிவன் என்றும் அழைப்பர் இவர்கள் இறைஞானம் பெற்றவர்களாக இருந்துள்ளனர். இறைவனைப்பற்றி அதிகம் போற்றினும், மூடக்கருத்துகளை அஞ்சாமல் அறிவுப்பூர்வமாக எடுத்துரைத்துள்ளனர். “சித்தன் போக்கு சிவன் போக்கு” – என்பதும், சித்தர்நெறி சீர்நெறி என்பதும் வழக்கத்தில் உள்ளவை.

சிவவாக்கியர், சித்தர் பாடல்களில் புரட்சியாகவும், மிகுதியாகவும், மூடத்தனத்தைச் சாடியும் பாடியவர் சிவவாக்கியர். இவர் “சிவாயமே” என்ற தொடரைத் தம் பாடலின் இறுதிச் சீராகப் பல பாடல்களில் அமைத்துள்ளார். அதனால் சிவவாக்கியர் என்ற காரணப் பெயர் வந்துள்ளது எனலாம். மேலும் ‘சிவவாக்கியம் சொல்வேன்’ என்று இவர் தம், முதல் பாடலில் தொடுத்துள்ளார். இந்தக் காரணங்களால் இவருக்குச் சிவவாக்கியர் என்றபெயர் அமைந்துள்ளது. சிவத்தைத் தம் வாக்கியமாகக் கொண்டவர் என்பதே இவரின் பெயர் விளக்கமாகும். இவர் குழந்தையாகப் பிறக்கும் போதே ‘குவாகுவா’ – என்று கத்துவதற்குப் பதிலாக ‘சிவா சிவா’ என சிவநாமத்ததை உச்சரித்தாராம். எனவே சிவவாக்கியர் எனப்பெயர் சூட்டப்பட்டது. (பட்டத்திமைந்தன் 2016; 772) கலை அரசு

2005; 81) இது ஏற்புடையதன்று. ஆயினும் சிவனையும் பல பாடல்களில் போற்றிப் புகழ்ந்துள்ளார். கடவுள் வாழ்த்துப் பாடலாக,

"அரியதோர் நமச்சிவாயம் ஆதிஅந்தம் ஆனதும்

ஆறிரண்டு நூறுதேவர் அன்றுஉரைத்த மந்திரம்

கரியதோர் எழுத்தையுன்னி சொல்லுவேன் சிவவாக்கியம்

தோஷ தோஷ பாவமாயை தூரதூர ஓடவே!" (சிவவாக்கியர். பாடல் – 1)

இப்பாடல் நமச்சிவாயம் என்ற மந்திரத்தால் பெறப்படும் பொருள், அரியபொருளாகிய சிவமே ஆதியும் அந்தமும் ஆகும். இதை உச்சரித்தால் தோஷங்கள், பாவங்கள், மாயைகள் யாவும் விலகி ஓடிவிடும் என, சிவத்தின் பெருமையைப் போற்றுகிறார்.

இறுதிப் பாடலில் (550) சிவனின் பெருமையை,

"சிவாயவசி என்னவும் செபிக்கஇச் சகம்எலாம்

சிவாயவசி என்னவும் செபிக்க யாவும் சித்தியாம்

சிவாயவசி என்னவும் செபிக்க வானம் ஆளலாம்

சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே!" ( சி.வா.பா – 550)

சிவாயவசி என செபித்துச் சிவனை வணங்குவதால், அது உலகம் முழுவதும் பரவும். இதனால் எல்லாம் வெற்றியாகும். வானுலகையே ஆளலாம், மூல ஆதாரத்தில் உள்ள தீ தலைக்கு மேல் ஏறிச் சிறப்பு தரும்" எனக் கூறியுள்ளார். இதிலிருந்து அவருடைய சிவபக்தி, பெயருக்கேற்ப விளங்கக் காணலாம்.

## 3. மூடத்தன எதிர்ப்புகள்

போலித்தொழுகை: தெய்வநம்பிக்கை அதீதமாக இருப்பினும் மூடத்தனங்களுக்கு எதிராக, சிவவாக்கியர் குரல் கொடுக்கிறார். பல சாத்திர நூல்களை ஓதுகின்ற சட்ட நாதர் என்னும் பட்டரே, உடல் வியர்த்து, மூச்சுவிட முடியாமல், இறப்பு வந்து சாவின் தலைவாசலில் நிற்கும் போது வேதங்கள் உம்மை வந்து காப்பாற்றி உதவுமா? எனப் போலிச் சடங்குகளைச் சாடி வினா எழுப்புகிறார்.

"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே

வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ?" (சிவா.பா – 14)

எனச் சாடுகிறார். இஃது உண்மையான தன்மை இன்றி வேதம் கூட நன்மை பயக்காது என்பதாம். மேலும் "கோவிலையும், குளங்களையும் கும்பிடும் குலாமரே! (கீழ் மக்களே) அவை மனத்திற்குள் உள்ளன. போலித் தனமான தொழுகையால் பயன் இல்லை" என்கிறார்.

"கோயிலானது ஏதடா? குளங்களாவது ஏதடா?

கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே

கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே

ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே!" (சி.வா.பா – 35)

என்று போலிகளைச் சாடுகிறார். மேலும், தண்ணீரில் கிடக்கும் தவளை போல் நீரில் மூழ்கினால் பயன் கிட்டுமா? தவளை எதை உணர்ந்து கொண்டது? எனச் சாடுகிறார்.

"காலை மாலை நீரிலே முழுகும் மந்த மூடர்காள்

காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்?" (சி.வா.பா – 132)

மக்களின் மனத்தில் அன்பு, அறம், நேர்மை, வாய்மை போன்றவற்றைக் கடைப்பிடிக்கவே பக்தி இயக்கங்கள் தோன்றின. ஆனால் நாளடைவில் செல்வம் சேர்க்கும் களங்களாக, அதிகாரமையங்களாகக் கோவில்கள் மாறிப்போயின. சிலர் பொய்த் துறவிகளாகத் திரிந்தனர். இன்றும் திரிகின்றனர். இவர்களை எதிர்த்துச் சித்தர்கள் பலர் குரல் கொடுத்தனர். சிவவாக்கியர், போலித்துறவிகளை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார். முக்தியும், பக்தியும் பேசி வயிறு வளர்க்கும் போலித்துறவிகள் பாழ்நரகில் வீழ்வர் எனச் சாடுகிறார்.

"முத்திசேரச் சித்தி இங்கு முன்னளிப் போன் பாரென
சத்தியங்கள் சொல்லி எங்கும் சாமிவேடம் பூண்டவர்
நித்தியம் வயிறு வளர்க்க நீதி ஞானம் பேசியே
பத்தியாய்ப் பணம் பறித்துப் பாழ் நரகில் வீழ்வரேல்" (சி.வா.பா – 505)

மேலும், பொய்யான மனம் கொண்டொழுகும் பக்தர்களை, "பொருள்மீது ஆசை கொண்டு அடுத்தவர் பொருளை அபகரிக்க மோசம் செய்து வேஷம் போடும் பக்தர்கள் நரகத்திற்குச் செல்வர்" எனக் குமுறுகிறார் சிவவாக்கியர்.

"ஆசைகொண்டு அனுதினமும் அன்னியர் பொருளினை
மோசம் செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்
பூசையோடு மே நிட்டை பூ பறிக்கச் செய்பாதகர்
காசினியில் எழுநரகைக் காத்திருப்பது உண்மையே!" (சி. வா. பா – 498)

இவ்வாறு போலித் துறவிகளையும், பக்தர்களையும் கண்டித்துக் குரல் கொடுக்கிறார்.

### 4. சாதிமறுப்புக் குரல்

சாதி என்ற பெயரில் பல கொடுமைகள் சித்தர்கள் காலத்தில் கொடிகட்டிப் பறந்துள்ளன. இவற்றைச் சித்தர்களின் பாடல்களில் நிறையக் காணமுடிகிறது. புறத்தூய்மையை மட்டும் புத்திசாலித்தனமாகக் கடை பிடித்துக்கொண்டு, அகத் தூய்மையின்றித் தீண்டாமை, சாதி, புலால் உண்ணல் ஆகிய காரணங்களைக் காட்டிச் சாதி பிரித்து இழிவு படுத்தினர். அவர்களை ஒதுக்கி வைத்தனர். கோயில் குளங்களுக்குள் நுழையத் தடைவிதித்தனர். இவற்றை வெறுத்த சிவவாக்கியர் "பறைச்சி, பணக்காரி என்பதெல்லாம் உங்களுக்கு மோகத்தின் போது தெரிவதில்லை; எலும்பு, தோல், இறைச்சி இவற்றில் சாதி தெரிவதில்லை" எனச் சாடுகிறார்.

"பறைச்சி ஆவதேதடா பணத்தி ஆவதேதடா?
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கம் இட்டிருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ, பணத்திபோகம் வேறதோ?
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே" (சி.வ.பா:40)

எனச்சாதி வெறியர்களுக்குச் சவுக்கடி கொடுக்கிறார். மீன் இறைச்சியையோ, மான் இறைச்சியையோ உண்பதில்லை. ஆனால், மீன் இருக்கும் குளத்தின் நீரில் தான் குளிக்கின்றனர்; நீரைக் குடிக்கின்றனர். மான் தோலில்தான் பூணூல் முடிச்சுக் கட்டுகிறார்கள். இதனை,

"மீனிறைச்சி தின்றதில்லை அன்றுமின்றும் வேதியர்
மீனிருக்கும் நீரிலோ மூழ்குவதும் குடிப்பதும்
மானிறைச்சி தின்றதில்லை அன்றுமின்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்பு நூல் அணிவதும்" (சி.வா.பா 159) என ஏசுகிறார்.

இதே கருத்தை சிவநெறிச் செல்வர் திருநாவுக்கரசர்,

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்!

கோத்திரமும் குலமும் கொண்டுஎன் செய்வீர்?"

எனச் சாதி, மத பேதங்களைச் சாடுகிறார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான் – (குறள் – 972)"

எனத் திருவள்ளுவரும்,

"சாதி மதங்களைப் பாரோம் – உயர்

சன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்

வேதி யராயினும் ஒன்றே – அன்றி

வேறு குலத்தவராயினும் ஒன்றே" - என பாரதியாரும் கண்டித்திருப்பது நோக்கத்தக்கது.

மேலும், ஆட்டிறைச்சியையோ, மாட்டிறைச்சியையோ வேதியர்கள் உண்பதில்லை. ஆனால் யாகத்தீயில் பசுவுக்குப் பதிலாக ஆட்டைப் போடுவர். (இது பழைய வழக்கம் அதன் அறிகுறியாக இப்போது ஆட்டு முகம் உருவம் உடைய மரக்கட்டையால் யாகப் பொருட்களை யாகத் தீயில் இடுகிறார்கள்) மாட்டிறைச்சியை உண்ணாது அதன் பாலையும் மரக்கறிக்கு ஒப்பாக உண்கின்றனர். இவற்றிலெல்லாம் சாதி தெரிவதில்லையா? எனச் சாடுகிறார் சிவவாக்கியச் சித்தர். அப்படியானால் உயிர்க்கொலைகளையும், புலால் உண்பதையும் சிவவாக்கியர் ஆதரிக்கிறார் என்பதில்லை. புலால் மறுத்தல் என்பதைப் புனிதப் படுத்திச் சக மனிதர்களை தீண்டத் தகாதவர் என ஒதுக்கி வைப்பதையே சிவவாக்கியர் கண்டிக்கிறார். ஆனால் புலால் உண்ணுதலையும் உயிர்ப்பலிகளையும் அவர் விரும்பவில்லை. இதனை, தங்கள் உடல் நலன் வேண்டி ஆடு, கோழிகளைப் ' பூசை ' என்று கூறிப்பலியிடுவதை வெறுக்கிறார்.

"தங்கள் தேகம் நோய்ப்பெறின் தனைப் பிடாரி கோயிலில்

பொங்கல் வைத்து ஆடுகோழிப் பூசைப் பலியை இட்டிட

நங்கச்சொல்லு நலமிகுந்து நாளும் தேய்ந்து மூஞ்சூராய்

உங்கள் குலத்துத் தெய்வமும்மை உருக்குவதில்லையே" (சி.வா.பா – 497)

என்ற பாடற்கருத்து மூடநம்பிக்கைக் கொடுமையை வெறுத்து ஒதுக்குகிறது.

## 5. மூடத்தீட்டுச் சடங்கு

"மாதந்தோறும் பெண்களுக்குத் தீட்டு வருகிறது என்கிறீர்கள். சிலருக்கு வராமல் உள்ளதே? அவர்களுக்கு மாதம் இன்னும் வரவில்லையா? மாதாமாதம் வராமல் நின்ற பிறகு அந்தத் தீட்டினால்தான் குழந்தையும் வளர்ந்து வடிவு பெறுகிறது. நாதமும், வேதமும் ஓசை வேறுபட்டவை. வேதத்தை ஒருகுலத்தினர் ஓதலாம், பிறகுலத்தினர் ஓதக்கூடாது என்ற வேறுபாடு ஏன்? இதற்கு விடை கூறுங்களடா!. எனப் பெண்களுக்கு மாதவிடாய் வருவதைத் தீட்டு எனக்கூறி ஒதுக்குவதைச் சாடுகிறார். இதில் பெண்ணுரிமைக்கும் அறிவியல் பூர்வமாக அன்றே குரல் கொடுத்திருப்பது வியப்பளிக்கிறது. இதனைக் கீழ்க்காண் பாடலில் காணலாம்.

"மாதமாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்

மாதம் அற்று நின்றலோ வளர்ந்து ரூப மானது

நாதமேது வேதமேது நற்குலங்கள் ஏதடா?

வேதமோதும் வேதியர் விளைந்தவாறும் பேசடா!" (சி.வா.பா136)

மேலும், தூமை (தீட்டு) என்று நீங்கள் இகழ்வது இயற்கையாகப் பெண்கள் உடலில் ஊறிவருவது. அதில் உறைந்து நின்றே குழந்தை உயிர் வளர்கிறது. இதையறியாமல் இகழ்ந்து பேசும் மூடர்களே! உம் பேச்சால் விளைந்த பயன் என்ன?

“ஊறிநின்ற தூமையை உறைந்துநின்ற சீவனை

வேறுபேசி மூடரே விளைந்தவாறது ஏதடா

நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன

சீறுகின்ற மூடனேஅத் தூமைநின்ற கோலமே” (சி. சிவ 138) என ஏசுகிறார்.

உயர் குலத்தில் பிறந்தவர் எனக் கூறப்படும் அவரும் நாற்றமான அத்தூய்மையில் உண்டானவரே! கோபத்துடன் குமுறி இழித்துப் பேசும் மூடர்களே! அந்தத் தூமையில் இருந்து தான் உங்கள் உடம்பும் வடிவம் பெற்றது என்பதை உணருங்கள். (வைதிகர்கள் மாதவிடாய் நிகழ்வதை இழிவாகப் பேசி ஒதுக்கியதை இப்படிக் கண்டிக்கிறார் சித்தர் சிவவாக்கியர். கருமுட்டை உற்பத்தியாகிவிட்டது என்பதை அறிவிக்கும் அறிவிப்பே மாதவிடாய் ஒழுக்கு என்பதாம். இஃது இன்றைய அறிவியல் உண்மையும் கூட. பெண்களுக்கு மாதவிடாய் இல்லையேல் குழந்தைப்பேறு இராது. அவர்களை மலடி என்று இழித்துப் பேசுவர். அதனைச் சுட்டியுரைக்கிறார் சிவவாக்கியர்

## 6. மூடப்பேய்கள், பூசாரிகள்

பேய்கள், பிசாசுகள், பூதங்கள் இருப்பதாகக் கூறும் மூடநம்பிக்கை அன்று நிலவியுள்ளது. இன்றும் இந்நம்பிக்கை எல்லா மதத்தினரிடையேயும் உள்ளது. இவற்றைச் சொல்லி ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்களைச் சித்தர் சிவவாக்கியர் கண்டிக்கிறார். “பேய்கள் பேய்கள் என்று தவறாகப் பேசும் பேயர்களே! அந்தப் பேய்களை ஓட்டப் பூசை போடுகிறீர்களே! பேயும், பிடாரியும் பூசையை ஏற்குமோ? ஆதியும், அனாதியுமான கடவுளுக்குச் செய்யும் பூசையைப் பேய்கள் ஏற்குமா? “அச்சம் தரும் எண்ணமுள்ள உடம்பே பேய் என்ற கணக்கை அறிந்து கொள்ளுங்கள்” எனப் போலிச் சாமியார்களை வெறுத்து ஒதுக்குகிறார். இதனைக் கீழ்க்காண் பாடல் விளக்குகிறது.

“பேய்கள் பேய்க ளென்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்!

பேய்கள் பூசை கொள்ளுமோ? பிடாரிபூசை கொள்ளுமோ?

ஆதிபூசை கொள்ளுமோ? அனாதி பூசை கொள்ளுமோ?

காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டதே!” (சி.வா.பா. 254)

இதையே மக்கள் கவிஞர் பட்டுக் கோட்டைக் கல்யாணசுந்தரம்,

“வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு

விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க! உந்தன்

வீரத்தை முளையிலேயே கிள்ளி வைப்பாங்க!

வேலையற்ற வீணர்களின், மூளையற்ற வார்த்தைகளை

வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே!” எனக் குழந்தைகளுக்குப் பாடுவதுபோல் மூடநம்பிக்கையை வளர்க்கும் மூடர்களுக்குப் பாடம் புகட்டுகிறார்.

சிவவாக்கியர் “போலி வேடம் தரித்து ஏமாற்றும் எத்தர்களை, சாத்திரப் புத்தகத்தை மேன்மையாக எண்ணி, ஞானத்தை ஓதும் பொய்யர்களே! உங்கள் யோக நிட்டையும், நீங்கள் ஓதும் ஞானமும், மந்திர எழுத்துகளும், உடம்பில் பூசிய விபூதிப் பட்டையின் காரணமும் யாவை என்று கூறுவீர்களா? பாதகம் செய்யும் கபடர்களே” எனப் பொய்வேட தாரிகளின் முக மூடியைக் கிழிக்கிறார். இதனை,

“சட்டையிட்டு மணிதுலங்கும் சாத்திரச் சழக்கரே

பொஸ்தகத்தை மெத்தவைத்து போதமோதும் பொய்யரே

நிட்டையேது ஞானமேது நீரிருந்த அக்ஷரம்

பட்டையேது சொல்லிரே பாதகக் கபடரே!“ (சி.வா.பா: 250)

## 7. முடிவுரை

சித்தர்கள் சிவனையே நினைத்துப் பணிந்தாலும், மூடநம்பிக்கைகளை எதிர்க்கும் கருத்துகளைத் தேவையான இடத்தில் பாடிச் சாடியுள்ளனர். அதுவும் முடியரசர்கள் காலங்களில் அடிபணியாது, மூடத்தனங்களை, போலித்தனங்களை ஏமாற்று வேலைகளை அஞ்சாது உரைத்துள்ளனர். 20 ஆம் நூற்றாண்டில் சுவாமி விவேகானந்தர், இராமானுஜர், காந்தியடிகள், டாக்டர் இராஜேந்திரபிரசாத், அம்பேத்கர், தந்தைபெரியார், அறிஞர்அண்ணா, கலைஞர்கருணாநிதி, பாரதியார், பாரதிதாசன் ஆகியோர், மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் புரட்சி செய்து சட்டமாக்கக் காரணமான முற்போக்குக் கருத்துகளை அஞ்சாது சுமார் 1000ம் ஆண்டுகளுக்கு முன்பே வீரிய வித்துகளை விதைத்துச் சென்றவர்கள் சித்தர்கள். அவர்களுள் “சிவவாக்கியரின் சிந்தனைப் புரட்சி” வியக்கத்தக்கது; போற்றத்தக்கது; பின்பற்றத்தக்கது; வணங்கத்தக்கது!

சித்தர்கள் புகழ் வாழ்க! சித்தர்கள் வாக்குகள் வளர்க! சிவவாக்கியர் நெறி வெல்க!

## துணைநூற்பட்டியல்

[1]. சித்தர் பாடல்கள் – மூலமும் உரையும், முனைவர் அ. அறிவொளி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.

[2]. தமிழ்ச் சித்தர் மரபு – முனைவர் பேராசிரியர் டி.என். கணபதி, ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை – 83

[3]. அறிவே தெய்வம் – பேராசிரியர் அரங்கராமலிங்கம்

[4]. சித்தர் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை,சென்னை - 108

[5]. பாரதியார் பாடல்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை –17

[6]. திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை - 17